**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.60/2023**

| Deposition of Name | S. ராஜா, Inspector | Prosecution | LW-16 as PW-4 |
|---|---|---|---|
| Father Name | சாரங்கபாணி | Defence | |
| Station | ஆணைக்காரன் சத்திரம் PS | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 47/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**19.02.2026 எதிரி ஆஜர்**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிகிறேன். வழக்கு சமயத்தில் பணி புரிந்த சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயப்பிரக்காஷ் மற்றும் உதவி ஆய்வாளர்கள் முருகேசன், அமுதாராணி ஆகியோர்களுடன் நான் பணிபுரிந்துள்ளதால் அவர்கது கையெழுத்தும் கையொப்பமும் நான் நன்கு அறிவேன். அவர்களுக்காக ஆவணங்களின் அடிப்படையில் நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 24.12.2020 ம் தேதி காலை 7.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ஜெயப்பிரக்காஷ் காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது மஞ்சுளா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலைய குற்ற எண். 1124/2020 u/s 279, 304A IPCயாக வழக்கு பதிவு செய்து விசாரணைக்காக ஆய்வாளர் முருகேசன் பார்வைக்கு வைத்துள்ளார். அந்த அச்சு **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு** செய்யப்பட்டுள்ளது. பின்னர் வழக்கினை விசாரணைக்கு எடுத்து கொண்ட ஆய்வாளர் முருகேசன் அன்றைய தினமே காலை 9.00 மணியளவில் சம்பவ இடமான புத்தூர் மதகடி ஆசாத் தெரு எதிரே மெயின் ரோடு சென்று சாட்சிகள் ஜெயகாந்தன் மற்றும் ரங்கநாதன் ஆகியோர் முன்னிலையில் விசாரணை செய்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார்

செய்துள்ளார். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.5 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

பின்னர் அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு இவ்வழக்கில் இறந்த ஜோதி என்பவரின் பிரேதத்தின் மீதான விசாரணையை சீர்காழி அரசு மருத்துவமனை சவ கிடங்கு முன்பு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்துள்ளார். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் வழக்கில் இறந்தவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து மருத்துவர் தினேஷ் அவர்களிடம் பிரேதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் தினேஷ் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவர் கொடுத்த **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ-8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் கடந்த 25.12.2020 ம் தேதியன்று 13.00 மணிக்கு புத்தூர் கடைத்தெரு அருகில் நின்று கொண்டிருந்தவரை குற்ற காரணம் கூறி கைது செய்து பின்னர் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்பு வாகன விபத்தினை ஏற்படுத்திய வாகனமான TN04AK9906 என்ற நான்குசக்கர வாகனத்தையும் TN 91V5537 என்ற இருசக்கர வாகனத்தையும் மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பி வைத்தார். ஆய்வாளர் முருகேசன் பணி மாறுதலில் சென்றதால் ஆய்வாளர் அமுதராணி வழக்கு கோப்புகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றார். **அந்த வாகன தனிக்கை அறிக்கைகள் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் புலன் விசாரணையை முடித்து கடந்த 20.08.2021 ஆம் தேதி எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் u/s 279, 304A IPCபடி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் புகார் அளித்தது யார் என்றால் இறந்து போனவரின் மனைவி மஞ்சுளா. புகார் என் முன்பு எழுத பட்டதா அல்லது ஏற்கனவே எழுதி கொண்டு வரப்பட்டதா என்றால் எழுதி கொண்டு வந்து என்னிடம் கொடுக்கப்பட்டது. எந்த தேதி மற்றும் நேரத்தில் அப்புகார் கொடுக்கப்பட்டது என்றால் 24.12.2020 அன்று காலை 7.00 மணிக்கு கொடுக்கப்பட்டது. விபத்து சம்பந்தமாக மருத்துவ மனையில் இருந்து ஏதேனும் தகவல் வந்ததா என்றால் கிடையாது. புகாரில் முபின், புகாரி என்பவர்கள் சொல்லி தான் தனக்கு விபத்து பற்றிய தகவல் தெரியும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி நபர்கள் தான் எதிரி பற்றிய விபரத்தை புகார்தாரரிடம் சொன்னவர்கள் ஆவார்கள். அந்த இரண்டு நபர்களை விசாரித்து புலன் விசாரணை அதிகாரி வாக்குமூலம் பெற்றாரா? என்றால் புலன் விசாரணை அதிகாரி அவர்களை விசாரணை செய்யவில்லை.

காரின் வாகன ஆய்வறிக்கையில் முன்பக்க இடது புற கார் பாகங்கள் உடைந்திருப்பதாகத்தாகவும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மர்கார்டு, பேனட், பம்பர் மற்றும் வாகனத்தின் முன்பகுதி உள்ளே சென்றிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்த நபர் வாகனத்தில் சம்பவத்தின் போது எந்த திசையில் சென்றார் என்றால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்றார். அதே போல எதிரியின் வாகனம் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்ததா என்றால் ஆமாம். வரைபடத்தில் இறந்த நபர் ரோட்டிற்கு இடது பக்கம் சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

இறந்த நபர் இடது பக்கமாக சென்றிறுந்தால் எதிரே வந்த காரின் இடது புறம் டேமேஜ் ஆக வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வரைபடத்தின் படி பார்த்தால் காரின் வலது பக்கம் தான் டேமேஜ் ஆகியிருக்க வாய்ப்பு அதிகம் என்றால் சரியல்ல. விசாரணை அதிகாரி சம்பவ இடம்செல்லாமல், விசாரிக்காமல் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. புகாரினை எங்கு வைத்து கொடுத்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து கொடுத்தார்கள். இந்த வழக்கில் மகசர் சாட்சிகள் சம்பவம் நடைபெற்ற ஊரை சேர்ந்தவர்கள் அல்ல என்றால் சரிதான். இறந்தவர் அந்த ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான்.

சம்பவம் நடந்த இடம் நிறைய வீடுகள் மற்றும் கடைகள் உள்ள இடம்

என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வந்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டுயிருந்தால் அங்கு வசிக்கும் நபர்கள் விசாரிக்கப்பட்டு சாட்சிகளாக சேர்க்கப்பட்டு இருப்பார்கள் என்றாலும்சம்பவ இடம் செல்லாததால் தான் அத்தகைய சாட்சிகள் சேர்க்க்படவில்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு சாட்சிகளை எந்த இடத்தில் வைத்து எப்போது விசாரணை அதிகாரி விசாரித்தார் என்றால் சம்பவ நாள் அன்று பார்வை மகசர் சாட்சிகள் சம்பவ இடத்தில் வைத்தும், ஏனைய சாட்சிகளை காவல் நிலையத்தில் வைத்தும் விசாரணை செய்ததாக ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு வாகனங்களையும் மோட்டார் வாகன ஆய்வறிக்கைக்கு எப்போது அனுப்பினார்கள் என்றால் இறந்தவரின் வாகனம் 4 மாதம் 11 நாட்கள் கழித்து அனுப்பப்பட்டது.

இந்த விபத்தில் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை என்று சேர்க்கப்பட்டது எப்படி என்றால் அதிவேகம் என்பது சாலையில் இடத்திற்கு தகுந்தார் போல் மாறுவது ஆகும். மேலும் குடியிருக்கும் இடங்கள் மற்றும் மக்கள் நடமாட்டம் உள்ள இடங்களில் மணிக்கு 30 கிமீ வேகத்தில் செல்ல வேண்டும் என்பதாகும். சம்பவ இடம் குடியிருப்பு நிறைந்த பகுதி என்றால் சரிதான். சம்பவ இடம் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். குடியிருப்பு பகுதி, மக்கள் வசிக்கும் நெருக்கடி பகுதி என்றால் அந்த இடத்தில் வேகம் தொடர்பான அறிவிப்பு பலகை இருக்கும் என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள வரைபடத்தில் வேகம் தொடர்பான அறிவிப்பு பலகை ஏதேனும் இருந்ததா என்றால் இல்லை.

மோட்டார் வாகன விதி 1988 படி சாலையில் செல்லத்தக்க வேகத்தை குறித்து எல்லா இடங்களிலும் அறிவிப்பு பலகை வைக்க வேண்டிய அவசியமில்லை. சாலைக்கு ஏற்றாற்போல அந்த அதிகபட்ச வேகம் என்னும் அளவு மாறுபடும். எதிரி எத்தனை கிமீ வேகத்தில் சென்றார் என்பது பற்றி புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் அதிவேகமாக சென்றதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது. அப்பகுதியில் வேகத்தடை ஏதேனும் இருந்ததா என்றால் ஆவணத்தின் படி அதற்கான குறிப்புகள் எதுவும் இல்லை. அந்த இடத்தில் வேகத்தடை எதுவும் கிடையாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த இடத்தில் குறிப்பிட்ட வேகத்தில் தான் செல்ல வேண்டும் என்ற நிபந்தனை கிடையாது என்றாலும் வேகத்தடைகள் கிடையாது என்றாலும் சரியல்ல.

விசாரணை அதிகாரி சொல்வது போல் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட புகார் உட்பட அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து போலிசாரால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வாகனங்கள் கால தாமதமாக பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது என்பதற்கு காரணம் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இடைபட்ட நாட்களிலும் இரண்டு வாகனங்களிலும் உள்ள கோளாறுகளை சரி செய்து ஆய்விற்கு எடுத்துச்செல்ல வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல.

புலன் விசாரணை அதிகாரி சரியாக புலன் விசாரணை செய்யாமல் பாதிக்கப்பட்ட நபரின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடு பெற்று தர வேண்டும் என்ற எண்ணத்தில் சரியாக புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது வழக்கு பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் சென்று இந்த விபத்தினை ஏற்படுத்தவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இறந்து போனவரின் அதிவேகமும் அஜாக்கிரதையும் தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**